செய்தித்தாள் விளம்பரம்

# தமிழ்ப் பல்கலைக்கழகம்

(தேசிய தரமதிப்பீட்டுக்குழுவின் B++தரம் பெற்றது)

## தொலைநிலைக் கல்வி இயக்ககம்

(புதுதில்லி தொலைநிலைக் கல்விக் குழும (DEC) மற்றும் NCTE அங்கீகாரம் பெற்றது)

**வாகையூர், திருச்சி சாலை, தஞ்சாவூர் - 613 010**

# 2010 நாட்காட்டி ஆண்டு இளம் கல்வியியல் (B.Ed) சேர்க்கை

**(NCTE அனுமதி ஆணை:SRO/NCTE/B.Ed.-DE/2007-08/18616)**

காலம்: இரண்டு ஆண்டுகள் — பயிற்று மொழி: தமிழ்

2010 ஆம் நாட்காட்டி ஆண்டில், தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்வழி பி.எட். பட்டப்படிப்பிற்கு இரண்டு ஆண்டுகள் கற்பித்தல் அனுபவத்துடன் அரசு/அரசு ஒப்புதல் பெற்ற பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்களிடமிருந்து (இருபாலினர்) விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## கல்வித் தகுதி

- பின்வரும் பாடப்பிரிவுகளில் **இளநிலைப் பட்டத் தேர்ச்சி**

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | விலங்கியல் | புவி இயற்பியல் | சுற்றுச்சூழல் அறிவியல் |
| ஆங்கிலம் | வரலாறு | மின்னணுவியல் | நுண்ணுயிரியல் |
| கணிதம் | புவியியல் | உயிர் வேதியியல் | பயன்பாட்டுப் புவியியல் |
| இயற்பியல் | பயன்பாட்டுக் கணிதம் | உயிர்நுட்பவியல் | கணினி அறிவியல் |
| வேதியியல் | உயிர் இயற்பியல் | பயன்பாட்டு வேதியியல் | |
| தாவரவியல் | பயன்பாட்டு இயற்பியல் | தாவர உயிரியல் | |

**(அல்லது)**

- பின்வரும் பாடப்பிரிவுகளில் **முதுநிலைப் பட்டத் தேர்ச்சி***

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | அரசியல் அறிவியல் | தர்க்கவியல் (Logic) | உளவியல் (Psychology) |
| வணிகவியல் | சமூகவியல் | கணினிப் பயன்பாட்டியல் (MCA) | |
| மனைஅறிவியல் | இந்தியப் பண்பாடு | தகவல் தொழில்நுட்பவியல்/ (M.Sc.IT) | |

* – இம்மாணவர்கள் இளநிலை மற்றும் முதுநிலையில் தொடர்புடைய அதே பாடப்பிரிவில் பயின்றிருக்க வேண்டும். ***மாற்றுப் பாடத்தில் (Cross Major) இளநிலைப் பட்டம் பெற்றவராயின் விண்ணப்பிக்கத் தகுதி அற்றவராவர்.***

- உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிக் கல்வித்தகுதிகள் (10, +2) இல்லாமல் நேரடியாக இளநிலைப் பட்டம் பெற்றவர்களும் இளநிலைப் பட்டம் பெறாமல் நேரடியாக முதுநிலைப் பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கத் தகுதி அற்றவராவர்.
- பி.எட். சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவத்தினைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் நேரடியாக **ரூ.500/-**ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது மாவட்ட/வட்டத் தலைநகரங்களில் செயல்படும் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி மையங்களில் **ரூ.500/–**ஐ செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
- விண்ணப்பத்தினை அஞ்சல் வழி பெற விரும்புவோர் **The Director, DDE, The Tamil University, Thanjavur-10** என்ற பெயரில் **ரூ.550/–**க்குத் தஞ்சாவூரில் மாற்றத்தக்க வகையில் நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளில் பெறப்பட்ட கேட்பு வரைவோலையாகச் (Demand Draft payable at Thanjavur) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
- தமிழக அரசின் இனவாரி சுழற்சிமுறை அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**நுழைவுத் தேர்வு இல்லை**

- விண்ணப்பம் பெறுவதற்கு இறுதி நாள் : **30-11-2009** மாலை 5.00 மணி
- நிரப்பப்பட்ட விண்ணப்பம் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்திற்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள் : **30-11-2009** மாலை 5.45 மணி
- நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் **இயக்குநர், தொலைநிலைக்கல்வி இயக்ககம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 010** என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்பப்படல் வேண்டும். காலதாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மாவட்ட / வட்டத் தலைநகரங்களில் செயல்படும் தகவல் மையங்கள் பற்றி அறிந்து கொள்ள தொ.பே.எண்: 04362-227152


**முனைவர் ஆ. இராமநாதன்**
**இயக்குநர் (பொ)**

இணையதளம்: www.tamiluniversity.ac.in
தொ.பே.எண்: 04362-644506, 644507

**முனைவர் ஆ.கார்த்திகேயன்**
**பதிவாளர் (பொ)**